

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (31.08.2025) சென்னை கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கட்டடம், இராஜாஜி நகரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, இணை ஆணையர் திருமதி பெ.க.கவெனிதா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர் நாகராஜன், . சு.வேலு, திருமதி அமுதா, திருமதி தாவுத்பீ, திருமதி யோகப்பிரியா, திருமதி ஸ்ரீதனி அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, காந்திநகரில் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறி அரசு சார்பில் நிதி உதவி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட நிவாரண உதவிகள் வழங்கினார். உடன் வட்டாட்சியர் காயத்ரி, மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மண்டல தலைவர் ஜோதிலட்சுமி, பகுதி செயலாளர் நாராயண பிரசாத், ஒன்றிய செயலாளர் ப.ச. கமலேஷ், மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 192 வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, செப். 1 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19 ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்பு மிகு திட்டத்தின் 192 வது நாள்

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி உணவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 192 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு (30.08.2025) அன்று வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 98 அ காமராஜ் தெரு சந்திப்பு. 2) வட்டம் 98, அம்பேத்கர் நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.





### சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்குப் பகுதி

# 172 அ வட்டம் மாவட்டப் பிரதிநிதி ஜி.செல்வராஜ் மறைவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப். 1-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதியில் 172அ வட்டத்தில் உள்ள நேருநகரை சேர்ந்த மாவட்ட பிரதிநிதியும் 172அ வட்ட கழக பகுதி பிரதிநிதி ஜி.குணசேகரன் மூத்த சகோதரர் ஜி.செல்வராஜ் (வயது 60) அவர்கள் உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் 30.08.2025 சனிக்கிழமை இரவு 10.00 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தி அறிந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் , சைதை கிழக்கு - மேற்கு பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மேலும் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் மு.மணிமாறன், மாவட்ட கழக பொருளாளர் எஸ்.பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், முன்னாள் வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர், பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, சைதை த.சம்பத், வேளச்சேரி ந.பழநி, தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக்,

வட்ட கழக செயலாளர்கள் தா.மோகன்குமார், நேரு நகர் எஸ்.பாட்சா, நா.ராதாகிருஷ்ணன், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், சைதை ஆ.வரதன், சை.மு.சேகர், என்.தாமோதரன், எஸ்.முருகவேல், க.பாரதிராஜன், மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ஜி.யோவான், ச.சேகர், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், ஏ.மஜீத், மு.மகேஷ்லாரன்ஸ், டி.என்.சிவமணி, சூர்யா மணிவண்ணன்,

அணிகளின் நிர்வாகிகள் ஆர்.கிருஷ்ணகுமார், மோ.எழில், மு.முருகன், எஸ்.ஏ.மோகன்குமார், தி.தங்கராஜ், டி.ஏ.பீட்டர், தி.சத்தியேந்திரன், ரங்க சரவணன், ஆட்டோ குமார், வட்ட கழக நிர்வாகிகள் பி.பி.நாகராஜ், ஈ.தனசேகரன், துரை சரவணன், சைதை ஆ.விக்டர், எஸ்.முருகையன், டி.கண்ணன், மு.பலராமன், பா.சிவலிங்கம், எஸ்.பூமிநாதன், எஸ்.பிரகாஷ், இளைஞர் அணி நிர்வாகிகள் தி.கோகுல், ப.பரத்குமார் ராஜா சம்பத், மோ.குமரவேல், மாணவர் அணி எல்.தனுஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

மாலை 6.00 மணியளவில் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பகுதி செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு மயானம் வரை நடந்து சென்று அஞ்சலி செலுத்தினர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட முன்னாள் அவைத் தலைவர் நினைவில் வாழும் சிவிஎம்.அ.பொன்மொழி அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு காஞ்சி நகர மேனாள் செயலாளர் சி.வி.எம்.அ.சேகரன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ, மாமன்ற உறுப்பினர் விமலாதேவி சேகரன், எல்.அபுசாலி, அம்பி மாரிமுத்து, முட்டவாக்கம் மனோகரன், பானு, பு.திருவள்ளுவன், த.வேழவேந்தன் மற்றும் சி.வி.எம். குடும்பத்தினர் உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆரணி பேரூராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்‘ திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமையில், ஆரணி பேரூர் செயலாளர் பி. முத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன், முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பேரூர் நிர்வாகிகள் கரிகாலன், நீலகண்டன், ஜெயக்குமார், பிரபு, பிரபாகரன், சுல்தான், நாகராஜ், பாஸ்கர், சாலேக், முரளி, சாய் சத்யம், ஈஷா ஜாவித்,சூர்யா, ஜி.பாஸ்கர், ராஜா, மாடசாமி மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்ட மக்கள் இளைப்பாறும் வகையில் குளிர்பானங்கள், பிஸ்கட்கள் வழங்கப்பட்டன.

### கொளத்தூரில் கபாலீசுவரர் கல்லூரி மற்றும்

# மூத்த குடிமக்கள் உறைவிட கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, செப். 1 -

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (31.08.2025) சென்னை கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கட்டடம், இராஜாஜி நகரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளையும், சூளை, அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்கள் எளிதாகவும், விரைவாகவும் தரிசனம் மேற்கொள்ளும் வகையில் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

மறைந்த முதலமைச்சர்கள் காமராஜர், பக்தவச்சலம், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது ஆட்சி காலம் மற்றும் அதிமுக ஆட்சி காலத்தில் திருக்கோயில்கள் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு நடத்தப்படுவது வரலாறாகும். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் சார்பில் சைவ சித்தாந்த வகுப்புகளோடு கொளத்தூரில் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு நான்காண்டுகளுக்கு மேலாக எவர்வின் பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கல்லூரிக்கு என்று புதிதாக கட்டடம் கட்டுவதற்கு சோமநாத சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டில் இருந்த அனாதீன இடம் என 5.96 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட மாணவச் செல்வங்கள் உயர்கல்வி பயிலும் வகையில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 22 வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் அறை, முதல்வரின் படைப்பகம், உணவகம், வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, கொளத்தூர் ராஜாஜி நகரில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டடப்பட்டு வருகிறது. இங்கு 60 வயதிற்கு மேற்பட்ட, குடும்பத்தில் பராமரிக்க வசதி வாய்ப்பில்லாத 100 மூத்த குடிமக்கள் தங்கிடும் வகையில் அறைகள், சமையலறை மற்றும் உணவு கூடம், பார்வையாளர்களை அவசர ஊர்தியுடன் மருத்துவ மையம், நடைபாதையுடன் கூடிய சிறு பூங்கா, யோகா மற்றும் தியான அறை போன்ற வசதியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மூத்த குடிமக்கள் உறைவிடமும் வரும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இந்த உறைவிடத்திற்கான தொடர் செலவினத்திற்காக செல்வந்தர்கள் மற்றும் நிறுவனங்களின் சி.எஸ்,ஆர் நிதி வரவேற்கப்பட்டதில், இதுவரை ரூ. 5 கோடி வரப்பெற்றுள்ளது. இதனை வைப்பு நிதியாக வைத்து, அதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையில் மூத்த குடிமக்கள் உறைவிடம் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

சுமார் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சூளை அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்கு 2009 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது இத்திருக்கோயிலுக்கு தற்போது ரூ. 3 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுரம் மற்றும் அனைத்து சன்னதிகள் புதுப்பித்தல், தங்க விமானம், புதிய கொடிமரம், பக்தர்கள் தங்குமிடம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருகின்ற செப்டம்பர் மாதம் 4 ஆம் தேதி நடைபெற உள்ள குடமுழுக்கு பெருவிழாவின் போது பக்தர்கள் எளிதாகவும் விரைவாகவும் தரிசனம் மேற்கொள்ளும் வகையிலும், அவர்களுக்கு குடிநீர் உணவு மற்றும் பிரசாத பைகள் வழங்கிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களிடம் எழுந்துள்ள எதிர்ப்பு காரணமாக விரைவில் தமிழகத்தில் மாற்றம் வரும் என்று ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் தெரிவித்துள்ளாரே என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று சொன்னதை இந்தியா கூட்டணி முறியடித்து இழுபறி நிலையில் ஆட்சி அமைத்ததே பெரிய மாற்றமாகும். மேலும் தற்போது பாஜகவுக்கு இருக்கின்ற 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒருவர் கூட சட்டமன்றத்திற்கு நுழைய முடியாத நிலை ஏற்படும். இதுவே அந்த மாற்றமாகும் என்று தெரிவித்தார்.



சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் ஏ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி பேசினார். இதில் பகுதிச் செயலாளர் நந்தனம் மதி, மாவட்ட தலைவர் மூர்த்தி, மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

### பி.முத்து – எஸ்.ரோஸ் பொன்னையன் முன்னிலையில்

# ஆரணியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்!

## எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், செப். 1 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆரணி பேரூராட்சியில் நேற்று முன்தினம் ‘உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்’ திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தலைமையில், ஆரணி பேரூர் செயலாளர் பி. முத்து மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன், முன்னிலை வகுத்து, முகாமிற்கு வந்தவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தந்தனர்.

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் எம்.எஸ எம்.எஸ்.ஷ்ராஜ் முகாமை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூர் நிர்வாகிகள் கரிகாலன், நீலகண்டன், ஜெயக்குமார், பிரபு, பிரபாகரன், சுல்தான், நாகராஜ், பாஸ்கர், சாலேக், முரளி, சாய் சத்யம், ஈஷா ஜாவித், சூர்யா, ஜி. பாஸ்கர், ராஜா, மாடசாமி மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முகாமில் கலந்து கொண்ட மக்கள் இளைப்பாறும் வகையில் குளிர்பானங்கள் பிஸ்கட்கள் வழங்கப்பட்டன .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

**செப்டம்பர் 1 (2018)**



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**